# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C. 115/2025 | Date | : 17.02.2026 |
| Deposition of Witness for | : **அ.சா.1** | Taluk | : |
| Name | : **திரு. ரங்கநாதன்** | Calling | : |
| Father / Husband Name | : **மாதேஸ்** | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 17.02.2026.

**(எதிரிகள் 1 முதல் 3 நீதிமன்றத்தில் ஆஜரானார்கள். )**

**<u>அரசு தரப்பு முதல் விசாரணை :</u>**

1. நான் தற்போது சேலம் மாவட்டம், சங்ககிரி தாலுக்கா, இடங்கணசாலை கிராமத்தில் வசித்து தறி தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் எனது ஊரைச் சேர்ந்தவர்கள். கடந்த 1 1/2 வருடங்களுக்கு முன்பாக மதியம் சுமார் 01.30 மணியளவில் நான் பெரியாண்டிச்சி கோவில் அருகே இருந்த போது என் பின்னால் இருந்து ஒரு கும்பல் என்னை தள்ளி விடவே நான் கீழே விழுந்துவிட்டேன். நான் அச்சமயம் போதையில் இருந்தேன்.

2. அந்த சம்பவத்தில் எனக்கு தலையில் அடிபட்டு இரத்த காயம் ஏற்பட்டது. இது சம்மந்தமாக சேலம் மருத்துவமனையில் நான் சிகிச்சையில் இருந்தபோது, போலிசாரிடம் புகார் வாக்குமூலம் அளித்தேன். என்னிடம் காட்டப்படும்புகார் வாக்குமூலத்தில் கையொப்பம் என்னுடையது

தான். **(மேற்படி கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

எதிரிகள் தான் வழக்கு குற்ற சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் சந்தேகத்தின் பேரில் தான் எதிரிகள் மீது புகார் வாக்குமூலம் அளித்தேன் என்றால் சரிதான். என்னை யார் தாக்கினார்கள் என்றும் யார் என்னை கெட்ட வார்த்தையால் திட்டினார்கள் என்றோ எனக்கு தெரியாது. போலிசார் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் தான் நான் புகார் வாக்குமூலம் அளித்தேன் என்றால் சரிதான். எதிரிகளும் நானும் சமாதானம் ஆகிவிட்டோம் என்று சொன்னால் சரிதான். என்னிடம் காட்டப்படும் சமாதான மனுவில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். **(மேற்படி சமாதான மனு அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** இந்த வழக்கை நடத்த எனக்கு விருப்பம் இல்லை.

**<u>மறுவிசாரணை:–</u>** இல்லை.

Witness – Sd/– Ranganathan

Typed to my dictation in open court read over and explained to the witnesses in the presence of the accused and admitted by him to be correct.

Sd/- D. Sivakumar,
Judicial Magistrate No.II,
Sankari.